கொடைக்கானல் அரசு மருத்துவமனையில்

ரூ.5.39 கோடியில் வெளிநோயாளிகள் கட்டிடப் பணிகள்:அமைச்சர் சக்கரபாணி பார்வையிட்டு ஆய்வு

திண்டுக்கல், அக்.10–

பொதுப்பணிகள்,நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோர் திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் அரசு மருத்துவமனையில் ரூ.5.39 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் வெளிநோயாளிகள் பிரிவு கட்டிடப் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

அரசு கூடுதல் தலைமைச் செயலர் மங்கத்ராம் சர்மா, அரசு செயலர்(நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை) மரு.ஆர். செல்வராஜ், மாவட்ட கலெக்டர் மொ.நா.பூங்கொடி, பழனி சட்டமன்ற உறுப்பினர் இ.பெ.செந்தில்குமார், மதுரை (வடக்கு) சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த ஆய்வின்போது, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டு மக்களின் மேம்பாட்டுக்காக பல்வேறு திட்டப்பணிகளை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் திண்டுக்கல் மாவட்டத்தில் பல்வேறு திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கொடைக்கானல் அரசு மருத்துவமனையில் வெளிநோயாளிகள் பிரிவு கட்டடம் ரூ.5.39 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது. இந்த கட்டடத்தில் வெளிநோயாளிகள் பிரிவு, அவசர சிகிச்சை பிரிவு, மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் அறை, அறுவை சிகிச்சை அரங்கம், ஆய்வகம், மருத்துவர் ஆலோசனை அறைகள், சிடி ஸ்கேன் மற்றும் எக்ஸ்ரே அறைகள், பொருட்கள் இருப்பு அறை, பொதுக்கழிவறைகள் உட்பட வசதிகளுடன் கட்டப்பட்டு வருகின்றன.

பணிகளை தரமாகவும், விரைந்து முடிக்கவும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது, என பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, முதன்மை தலைமைப் பொறியாளர்(மதுரை மண்டலம்) செல்வராஜன், கண்காணிப்புப் பொறியாளர் (மதுரை மண்டலம்) அய்யாக்கண்ணு, செயற்பொறியாளர் தங்கவேல், கொடைக்கானல் நகராட்சி தலைவர் பா.செல்லத்துரை, கொடைக்கானல் நகர்மன்ற துணைத்தலைவர் கே.பி. என்.மாயக்கண்ணன், கொடைக்கானல் வருவாய் கோட்டாட்சியர் சிவராம், இணை இயக்குநர்(சுகாதார நலப்பணிகள்) மரு.இரா.பூமிநாதன், கொடைக்கானல் நகராட்சி ஆணையாளர் ப.சத்தியநாதன், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், மருத்துப் பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

வத்தலகுண்டு, நிலக்கோட்டை ஊராட்சி செயலாளர்கள் பணி குறித்து திண்டுக்கல் இணை இயக்குனர் நாகராஜ் ஆய்வு

வத்தலகுண்டு, அக்.10–

திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு மற்றும் நிலக்கோட்டையில் உள்ள 40 ஊராட்சிகளில் திண்டுக்கல் மாவட்ட இணை இயக்குனர் (ஊராட்சி) நாகராஜ் ஆய்வு பணி மேற்கொண்டார்.

அதில் ஊராட்சிகள் செயல்பாடு மற்றும் குடிநீர் வசதி சாலை வசதி தெரு விளக்கு பராமரிப்பு கழிவுநீர் சாக்கடை சுத்தம் செய்தல் ஓ எஸ் டி பராமரிப்பு போன்ற பணிகளும் வீட்டு வரி குழாய் வரி மற்றும் ஊராட்சி சம்பந்தப்பட்ட வரிகளை ஆன்லைன் மூலம் செலுத்த வேண்டும் என இந்த ஆறு மாத காலமாக அரசு அறிவித்துள்ளது. அதன்படி ஊராட்சி செயலாளர்கள் வீடு வீடாகச் சென்று வரி ஆன்லைன் மூலம் கட்ட வேண்டும் என அறிவுறுத்தவும் தாமதமாக கட்டுபவர்களுக்கு அவதாரம் விதிப்பது எப்படி என்றும் உடனடியாக கட்ட வலியுறுத்தியும் இது சம்பந்தமாக விழிப்புணர்வு ஏற்படுத்தவும் எடுத்துக் கூறப்பட்டன. ஊராட்சி செயலாளர் ஊராட்சியில் உள்ள அடிப்படை வசதிகள் மற்றும் மழைநீர் தேங்காத வண்ணம் பார்த்துக் கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் வத்தலக்குண்டு வட்டார வளர்ச்சி அலுவலர் உதயகுமார் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் நிர்வாகம் அழகுமணி துணை வட்டார வளர்ச்சி அலுவலர் தணிக்கை மணிமாறன் மற்றும் மண்டல துணை துணைவட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் அனைத்து ஊராட்சி செயலாளர் பிற அலுவலர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



சோழவந்தான் ஜெனகை மாரியம்மன் திருக்கோவில் நவராத்திரி விழா உற்சவம் 7–ம் நாள் அம்பாள் சிவனை வழிபட்ட காட்சி.

ஓட்டக்கோவில்பட்டி வடக்கு வாசல் செல்வி அம்மன் பரிவார தெய்வங்களின் புரட்டாசி மாத புரவி எடுப்பு விழா

மேலூர், அக்.10–

மதுரை மாவட்டம் மேலூர் வட்டம் ஓட்டக்கோவில்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள வடக்கு வாசல் செல்வி அம்மன் மற்றும் பரிவார தெய்வங்களின் உற்சவத்தை முன்னிட்டு புரட்டாசி புரவி எடுப்புதிருவிழா நேற்று நடைபெற்றது. நேற்று 8ம் தேதி வாணவேடிக்கை மேளதாளத்துடன்கிராமம் மந்தையில் இருந்து தேர்பவனி புறப்பட்டு, மாலை 4 மணி அளவில் அம்மன் மற்றும் பரிவார தேவதைகள் (புரவி) தேர் ஏற்றல் நிகழ்ச்சி கருங்காலக்குடி சந்திவீரன் பொட்டலில் இருந்து கொட்டும் மழையில் நனைந்தபடிபுறப்பட்டு கருங்காலக்குடி பேட்டை, திருச்சுனை வழியாக புரவியை பொதுமக்கள் சுமார் 5 கிலோ மீட்டர் தூரம் ஊர்வலமாக தூக்கி சென்று ஓட்டக்கோவில்பட்டி செல்வ விநாயகர் கோவிலில் இறக்கி வைத்தனர்.

இரவு 7 மணியளவில் விநாயகர் கோவில் முன்பு கிராமத்து அர்ச்சனை மற்றும் வாணவேடிக்கை நடைபெற்றது. அதை தொடர்ந்து அம்மன் பரிவார தேவதைகள் மந்தை சென்றடைந்து வாணவேடிக்கையுடன் கிராம மக்கள் வரவேற்றனர். இரவு 10 மணி அளவில் சுவாமி கண் திறப்பு பூஜை மற்றும் கிராம காரணக்காரர்களுக்கு மரியாதை செய்தனர். இன்று காலை மந்தைக்கோயில் முன்பு அம்மன் மற்றும் பரிவார தேவதைகளுக்கு கிராமத்து சார்பில் அபிசேகம் நடைபெறுகிறது. காலை 9 மணி அளவில் விநாயகர் கோவிலில் இருந்து பால்குடம் எடுத்து வரும் நிகழ்ச்சியும் அம்மனுக்கு பாலாபிசேகமும் அம்மன் மற்றும் பரிவார தேவதைகள் மந்தையிலிருந்து வீதி உலா புறப்படும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இரவு 7 மணி அளவில் சுவாமி திருக்கோவில் சென்றடைகிறது. அங்கு அம்மனுக்கு சிறப்பு பூஜை குட்டி சிறப்பு பூஜை நடைபெறுகிறது.

திருவிழா ஏற்பாட்டினை ஓட்டக்கோவில்பட்டி கிராம தலைவர் நா.அ. அழகு சுந்தரம், கிராம பொதுமக்கள், காரணக்காரர்கள் மற்றும் இளைஞர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

தேவகோட்டை அஞ்சல் அலுவலகத்தில் தபால் பார்சல் சேவை குறித்து தலைமை அதிகாரி செல்வராஜ் மாணவர்களுக்கு விளக்கம்

தேவகோட்டை, அக்.10–

தேசிய அஞ்சல் வாரத்தை முன்னிட்டு தேவகோட்டை தலைமை அஞ்சலகத்திற்கு சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளி மாணவர்கள் தலைமை ஆசிரியர் சொக்கலிங்கம் தலைமையில் களப்பயணம் சென்றனர். அப்போது அஞ்சல்துறையின் தேவகோட்டை தலைமை தபால் அதிகாரி செல்வராஜ் மாணவர்களை வரவேற்று மாணவர்களிடம் பேசுகையில், அஞ்சல் மற்றும் பார்சல் என்பது வாடிக்கையாளர்களுக்கு நல்ல உதவியாக இருக்கும். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பார்சல் சேவை மிக குறைந்த செலவில் அனுப்பலாம்.அனைத்துதபால்பெட்டிகள்மின்னணு செயலாக்கத்திற்கு மாற்றப்பட்டு உள்ளதையும் விளக்கினார். வெளிநாட்டு பார்சல் அனுப்புவதற்கு சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளது என்றும், அந்தமானுக்கு அனுப்பவேண்டிய பார்சல் தொடர்பாக முழு விவரங்கள் வழங்கப்பட்டது. அஞ்சல் துறையின் வழியாக அனுப்பும் தபால்களுக்கு மட்டுமே பொறுப்பு உண்டு. மிகவும் குறைவான கட்டணத்தில் வெளிநாடுகளுக்கு பார்சல் அனுப்புவது அஞ்சலகத்தில் மூலம் மட்டுமே இயலும் .அஞ்சலகத்தில் மூலமாக அனுப்பப்படும் பார்சல்கள் மிகக் குறைவான நாட்களில் வெளிநாடுகளை சென்று அடையும். மாணவர்களிடம் பல்வேறு கேள்விகள் கேட்டு பதில் கூறிய மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. ஆசிரியை முத்துலெட்சுமி நன்றி கூறினார். மாணவர்களை அழைத்து செல்வதற்கான ஏற்பாடுகளை ஆசிரியர் ஸ்ரீதர் செய்து இருந்தார்.



நேற்று (அக்டோபர்,9) பிறந்தநாள் கண்ட தமிழக பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சி.வ.மெய்ய நாதனுக்கு புதுக்கோட்டை வடக்கு மாவட்ட திமுக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் விராலிமலை மத்திய ஒன்றிய திமுக செயலாளர் அய்யப்பன் மாவட்ட எல்லை மாத்தூர் அருகே வரவேற்று புத்தங்கள் வழங்கி வாழ்த்துக்கள் தெரிவித்தார். உடன் விராலிமலை மத்திய ஒன்றிய அவைத் தலைவர் செந்தில்நாதன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் உள்ளனர்.

AUTHUM ஆத்தம் இன்வெஸ்ட்மென்ட் & இன்ஃப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட்
பதிவு அலுவலகம்: 707, ரஹேஜா சென்டர், ப்ரீ பிரஸ் ஜர்னல் சாலை,
நாரிமன் பாயிண்ட், மும்பை 400 021. Ph.: (022) 6747 2117
Fax: (022) 6747 2118 E-mail: info@authum.com

சுவாதீனம் அறிவிப்பு

[சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 2002–ன் விதி 8(1)]

கீழே கையொப்பமிடப்பட்ட ஆத்தம் இன்வெஸ்ட்மென்ட் & இன்ஃப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட்டின் ("AIIL") அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி (10.05.2024 தேதியிட்ட NCLT உத்தரவின்படி, ரிலையன்ஸ் கமர்ஷியல் பைனான்ஸ் லிமிடெட் ("RCFL") இலிருந்து AIIL க்கு கடன் வழங்கும் வணிகத்தை பிரித்ததன் விளைவாக), 2002ம் வருடத்திய கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும், மேற்சொன்ன சட்டத்தின் 13(2)வது பிரிவின் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படியும், 2002ம் வருடத்திய கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதி 3–ன் விதிமுறைக்கு இணங்கவும், கடன்தாரர் **1.) வி.பரமசிவம் லாரி பாடி லேபர் ஓர்க்ஸ், 2) பிரபு வி பி, 3.) பி.ரேவதி** ஆகியோருக்கு அனுப்பிய 21 ஜூன் 2024 தேதியிட்ட டிமாண்ட் நோட்டீசில் குறிப்பிடப்பட்டிருந்தபடி செலுத்த வேண்டிய தொகை **ரூ.47,29,488/–** (ரூபாய் நாற்பத்தேழு லட்சத்து இருபத்தொன்பதாயிரத்து நானூற்று எண்பத்தியெட்டு மட்டும்) மற்றும் அறிவிப்பில் கண்டுள்ள வட்டி தொகை ஆகியவற்றை மேற்சொன்ன நோட்டீஸ் பெறப்பட்ட 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார்.

கடன்தாரர்கள் மற்றும் உடன் கடன்தாரர்களுக்கு வழங்கப்பட்ட மேற்கண்ட அறிவிப்பில் கண்டுள்ள முழு தொகை, கூடுதல் வட்டி மற்றும் இதர கட்டணங்களை திரும்ப செலுத்தத் தவறியதால், கடன்தாரர்கள், உடன் கடன்தாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கும் அறிவிக்கப்படுவது யாதெனில், கீழே கையொப்பமிட்டுள்ளவர் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தை மேற்சொன்ன சட்டத்தின் 13(4)வது பிரிவின் கீழும், மேற்சொன்ன விதிமுறைகளின் 8வது விதிமுறைக்கு இணங்கவும் **04 அக்டோபர் 2024** அன்று அடையாள சுவாதீனம் எடுத்துக் கொண்டார்.

ஆத்தம் இன்வெஸ்ட்மென்ட் & இன்ஃப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட்டிற்கு திரும்ப செலுத்த வேண்டிய தொகை **ரூ.48,92,377/–** (ரூபாய் நாற்பத்தெட்டு லட்சத்து தொன்னூற்று இரண்டாயிரத்து முன்னூற்று எழுபத்தியேழு மட்டும்) மற்றும் வட்டி தொகைக்கும் இந்த சொத்து ஈடாக இருப்பதால், இந்த சொத்தில் யாரும் எந்தவித டீலிங்குகளையோ, பரிவர்த்தனைகளையோ வைத்துக் கொள்ளக்கூடாது என்று கடன்தாரர்கள் மற்றும் உடன் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுகிறது. சட்டத்தின் 13வது பிரிவின் துணைப் பிரிவு (8)ன் கீழ் ஈடுபெற்ற சொத்துக்களை மீட்பதற்காக, போதிய கால அவகாசம் உள்ளதால் அதை மீட்டுக்கொள்ள கடன்தாரர்கள் மற்றும் உடன் கடன்தாரர்களுக்கு இதன் மூலம் அழைப்பு விடுக்கப்படுகிறது.

அடமான சொத்தின் விவரம்

ஈடுபெற்ற ஆஸ்திகளின் சொத்து முகவரி : சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். விருதுநகர் மாவட்டம், விருதுநகர் பதிவு மாவட்டம், விருதுநகர் இணை I சார் பதிவு மாவட்டம், அருப்புக்கோட்டை தாலுக்கா, பழவநத்தம் கிராமம், நத்தம் ச.எண்.99/1ல் உள்ள நிலம் பின்னர் மேம்படுத்தப்பட்டு துணைப்பிரிவு புதிய ச.எண்.99/3 என மாற்றப்பட்டது. அதில் உள்ள நிலம் மற்றும் கட்டிடம், கதவு எண்கள்.1/2332, 1/2331, 1/2330 & 1/ 2329 மதிப்பீடு எண் 2332,2331, 2330,2329. அதன் எல்லைகள் மற்றும் விஸ்தீரணம் : வடக்கு: பிரபுவுக்கு சொந்தமான கட்டிடம் மற்றும் பொதுச் சுவர் மற்றும் 2வது அயிட்டத்தின் பாதை, கிழக்கு: பழனி மற்றும் பாலம்மாளுக்கு சொந்தமான பொதுவான பாதை, தெற்கு: கணபதியா பிள்ளையின் நிலங்கள், மேற்கு: ராஜேந்திரன் விவசாய நிலம். வடக்குப் பொதுச் சுவரின் பிரிக்கப்படாத 1⁄2 பங்கு நிலம் மற்றும் மூன்று பக்கச் சுவர் மற்றும் கிழக்குப் பாதையை உள்ளடக்கியது. மற்றும் 1 1⁄2 அடி தெற்கு மற்றும் மேற்கு பாதை மற்றும் கிழக்கு மேற்காக வடக்கில் 41 அடி தெற்கில் 41 அடி மற்றும் வடக்கு தெற்காக கிழக்கில் 58 1⁄2 அடி மேற்கில் 59 3⁄4 அடி மற்றும் அளவு 2424.25 சதுர அடி. (அதாவது, 225.206 சதுர மீட்டர்) நிலம் மற்றும் அதன் அனைத்து வசதிகளுடன் கூடிய கட்டிடம்.

அயிட்டம் எண். 2: பழவந்தம் கிராமத்தில் அமைந்துள்ள நிலம் மற்றும் கட்டிடம், ச.எண்.99/3, கதவு எண்.1/2333. அதன் எல்லைகள் : வடக்கு: அருப்புக்கோட்டை-விருதுநகர் பிரதான சாலை, கிழக்கு: குத்தகைதாரர் கட்டிடம், தெற்கே: குத்தகைதாரர் கட்டிடம், மேற்கு: ராஜேந்திரனுக்கு சொந்தமான நிலங்கள். இதற்குள் உள்ள நிலம். கிழக்கு மேற்காக வடக்கே 37 அடி தெற்கில் 37 அடி, வடக்கு தெற்காக கிழக்கில் 52 அடி மேற்கில் 52 அடி. மொத்தம் 1924 ச.அடி. நிலம். இந்த நிலத்தில் 1730 சதுர அடி கார்பெட் பகுதி மற்றும் கட்டிடம், மற்றும் 70 சதுர அடி ஏடிஎம் பகுதி உட்பட. அயிட்டம் எண்.1 & 2ஐயும் சேர்த்து மொத்தம் 4348.125 சதுர அடி. (சாலை இல்லாமல்)

இடம் : விருதுநகர் **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**
தேதி : 04.10.2024 **ஆத்தம் இன்வெஸ்ட்மென்ட் & இன்ஃப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட்**

திண்டுக்கல்லில் கல்லூரிச் சந்தை விற்பனைக் கண்காட்சி: கலெக்டர் பூங்கொடி தொடக்கி வைத்து பார்வையிட்டார்

திண்டுக்கல், அக்.9–

திண்டுக்கல் பிஎஸ்என்ஏ பொறியியல் தொழில்நுட்பக் கல்லூரியில், மகளிர் சுய உதவிக்குழுக்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை கல்லூரிகளில் சந்தைப்படுத்துதலுக்காக கல்லூரி சந்தை விற்பனைக் கண்காட்சியை மாவட்ட கலெக்டர் மொ.நா.பூங்கொடி, குத்துவிளக்கேற்றி தொடக்கி வைத்து பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட கலெக்டர் மொ.நா.பூங்கொடி, தெரிவித்ததாவது:

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் மகளிர் சுய உதவிக்குழுக்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை கல்லூரிகளில் சந்தைப்படுத்துதலுக்காக மூன்றாம் கட்டமாக திண்டுக்கல் பிஎஸ்என்ஏ பொறியியல் தொழில்நுட்பக் கல்லூரியில் தொடக்கி 10.10.2024ஆம் தேதி வரை கல்லூரி சந்தை விற்பனைக் கண்காட்சி நடத்தப்படுகிறது.

கல்லூரி சந்தை விற்பனைக் கண்காட்சியில் திண்டுக்கல் மாவட்டத்திலிருந்து 37 மகளிர் சுய உதவிக்குழுக்களும் மற்றும் திருச்சி, தேனி, மதுரை, இராமநாதபுரம் போன்ற வெளி மாவட்டங்களிலிருந்து 4 மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களும் என மொத்தம் 41 சுய உதவிக்குழுவினரின் உற்பத்திப் பொருட்களான பேன்சி, கைவினைப் பொருட்கள், சின்னாளபட்டி சேலைகள், சிறுதானிய உணவுப் பொருட்கள், வீட்டு உபயோகப்பொருட்கள், மென்பொம்மைகள், கவரிங் பொருட்கள் விற்பனைக்கு வைத்திடும் வண்ணம் உரிய அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் கண்காட்சியை மாணவ மாணவிகள் பார்வையிட்டு பொருட்களை வாங்கி மகளிர் சுயஉதவிக்குழுவினரை ஊக்கப்படுத்திட வேண்டும் என மாவட்ட கலெக்டர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர் சா.சதீஸ்பாபு, பிஎஸ்என்ஏ கல்லூரி டிரஸ்டி ஆர்.சூரிய ரகுராம், கல்லூரி முதல்வர் முனைவர் வாசுதேவன், முனைவர் மணிமாறன், முனைவர் ஆலிஸ்வரி, மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்க மேலாளர் பெ.வேல்முருகன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

ICICI Home Finance | **கார்ப்பரேட் அலுவலகம்:** ஐசிஐசிஐ எச்எப்சி டவர், அந்தேரி குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு), மும்பை 400059, இந்தியா
கிளை அலுவலகம்: லயன் ஆர்கேட், 1ஏ, முதல் தளம், மதுரை ரோடு, மேற்கு தெரு, சிந்துபூந்துறை, திருநெல்வேலி 627 001.

அசையாச் சொத்துகளை விற்பனை செய்வதற்கான அறிவிப்பு (விதி 8(6)ஐ பார்க்கவும்)

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(6)–ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ–ஏல விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் பொது மக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாததாரர்களுக்கு அறிவிக்கப்படுவது யாதெனில், ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்ட, ஈடுபெற்ற கடன் வழங்கியவரிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள/ஈடாக உள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்கள், "எங்கே எப்படி உள்ளதோ அப்படியே", "உள்ளது உள்ளபடி" மற்றும் 'எவ்வாறு உள்ளதோ அவ்வாறு" இங்கே கொடுக்கப்பட்டுள்ள சுருக்கமான விவரங்களின்படி விற்பனை செய்யப்படும்.

வ. எண்	கடன்தாரர்/ உடன் கடன்தாரர்கள் /உத்தரவாத தாரர்கள் / சட்டப்பூர்வ வாரிசுகள் பெயர்/ கடன் கணக்கு எண்.	ஈடுபெற்ற சொத்தின் (கள்) விவரங்கள், தெரிந்தவரை வில்லங்கள் ஏதேனும் இருந்தால்	நிலுவைத் தொகை	ரிசர்வ் விலை டேவணித் தொகை டெபாசிட்	சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம்	ஏலத் தேதி மற்றும் நேரம்	ஏலத் தேதிக்கு ஒரு நாள் முன்	SARFAESI நிலை
(A)	(B)	(C)	(D)	(E)	(F)	(G)	(H)	(I)
1	அய்யப்பன் C (கடன்தாரர்), கவிதா I (உடன் கடன்தாரர் 1) LHTVI00001264083 & LHTVI00001264084	கதவு எண். 37F/12, சர்வே எண். 11/3, திருநெவேலி மாநகராட்சி வார்டு எண். 8, இளங்கோ அடிகள் தெரு, கீழவீரராகவபுரம் கிராமம், மேலப்பாளையம் சார் பதிவு அலுவலகம், பாளையங்கோட்டை, பதிவு மாவட்டம், பாளையம்கோட்டை தாலுகா, திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளது.	ரூ. 23,26,215/- (3 செப்டம்பர், 2024 அன்று)	ரூ. 23,40,180/- ரூ. 2,34,018/-	06 நவம்பர் 2024 காலை 11 மணி முதல் மாலை 3 மணி வரை	13 நவம்பர் 2024 மதியம் 2 மணி முதல் மாலை 3 மணி வரை	12 நவம்பர் 2024	அடையாள சுவாதீனம்

எங்கள் ஏல நிறுவனமான **மேடெக்ஸ் நெட் பிரைவேட் லிமிடெட்டின்** இணையதளத்தில் (URL Link- https://assets.matexauctions.com) ஆன்லைன் ஏலம் நடத்தப்படும். அடமானதாரர்கள்/ அறிவிப்பாளர்களுக்கு மொத்த நிலுவைத் தொகையை கூடுதல் வட்டியுடன் **நவம்பர் 12, 2024** அன்று மாலை 5.00 மணிக்குள் செலுத்த கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது, இல்லையெனில் இந்த ஈடுபெற்ற சொத்துக்கள் மேலே குறிப்பிட்ட அட்டவணையின்படி விற்கப்படும்.

வருங்கால ஏலதாரர்(கள்) விளம்பரத்தின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின் கிளை அலுவலக முகவரியில் **நவம்பர் 12, 2024 அன்று மாலை 4.00 மணி** அல்லது அதற்கு முன் டேவணித் தொகை டெபாசிட்டை (EMD) RTGS/ டிமாண்ட் டிராப்ட் (DD) மூலம் (அட்டவணை E ஐப் பார்க்கவும்) சமர்ப்பிக்க வேண்டும். வருங்கால ஏலதாரர்(கள்) பதிவுப் படிவம் மற்றும் ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் படிவத்தின் கையொப்பமிடப்பட்ட நகலை ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின் மேற்கண்ட கிளை அலுவலக முகவரியில், **நவம்பர் 12, 2024 அன்று மாலை 05.00 மணி** அல்லது அதற்கு முன் சமர்ப்பிக்க வேண்டும். டேவணித் தொகை டெபாசிட்டிற்கான டிமாண்ட் டிராப்ட் (DD) தேசியமயமாக்கப்பட்ட/ பட்டியலிடப்பட்ட வங்கியிலிருந்து, மேற்கண்ட கிளை அலுவலக முகவரியில் பெறத்தக்க வகையில் "**ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் -ஆக்ஷன்**" என்ற பெயரில் இருக்க வேண்டும். ஆய்வு, ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது டெண்டர்களை சமர்ப்பித்தல் தொடர்பான கூடுதல் விளக்கங்களுக்கு, ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டை 9920807300 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி எந்த ஒரு காரணத்தையும் அளிக்காமல் ஏதேனும் அல்லது அனைத்து ஏலங்களையும் நிராகரிக்க உரிமை உண்டு. விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, https://www.icicihfc.com/ஐப் பார்வையிடவும்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
தேதி : 10.10.2024 | இடம் : தமிழ்நாடு ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் I CIN : U65922MH1999PLC120106

homefirst We'll take you home
Home First Finance Company India Limited
CIN: L65990MH2010PLC240703,
Website: homefirstindia.com Phone No.: 180030008425 Email ID: loanfirst@homefirstindia.com

பிரிவு 13(2)ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரராகிய நீங்கள் அட்டவணையில் குறிப்பிடப்படப்பட்டுள்ள சொத்தை அடமானம் வைத்ததன் மூலம் கடனைப் பெற்றுள்ளீர்கள். மேலும் கடன் ஒப்பந்தத்திற்காக கடன்தாரர்/இணை கடன்தாரர் என நீங்கள் கீழே குறிப்பிட்டுள்ளீர்கள். நீங்கள் வாங்கிய கடன் தொகையை திரும்ப செலுத்த தவறியதன் விளைவாக, 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் (சுருக்கமாக SARFAESI சட்டம்) உங்கள் கடன் கணக்கு 03.10.2024 அன்று செயல்படாத சொத்து என வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட் ஆகிய நாங்கள், நீங்கள் வழங்கிய முகவரிக்கு SARFAESI சட்டத்தின் பிரிவு 13(13) மற்றும் பிரிவு13(2)ன் கீழ் கோரிக்கை அறிவிப்பை வெளியிட்டுள்ளோம். 03.10.2024 அன்று மேற்சொன்ன அறிவிப்புகள் வெளியிடப்பட்டது மற்றும் உங்களுக்கு அளிக்கப்பட்ட பல்வேறு கடன்களை திரும்ப செலுத்துவதிலிருந்து நீங்கள் தவறிவிட்டீர்கள் என்று மேற்சொன்ன அறிவிப்புகளில் கூறப்பட்டுள்ளது. எனவே, SARFAESI சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் விதி 3(1)ன்படி அறிவிப்பு வழங்குவதற்காக தற்போதைய வெளியீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வ. எண்	கணக்கு, கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்(கள்) பெயர் மற்றும் முகவரி	செயல்படுத்தப்பட வேண்டிய பத்திரங்களின் விவரங்கள்	கோரிக்கை அறிவிப்பு தேதியன்று பாக்கித் தொகை மற்றும் மேலும் வட்டி, இதர செலவினங்கள் (ரூபாயில்)
1.	லட்சுமி முத்துப்பாண்டி, முருகேஸ்வரி முத்துப்பாண்டி, தினேஸ்வரி செந்தில்குமார், செந்தில்குமார் போஸ்	வீடு136, பழைய ஆர்.எஸ்.எண்.33/5A, புதிய ஆர்.எஸ்.எண்.33/5A1A1, C வார்டு எண். 30, பழைய கதவு எண்.136, புதிய கதவு எண்.136/3, சீமான் நகர், மேலமடை II பிட் கிராமம் மதுரை மாநகராட்சி , மதுரை வடக்கு தாலுகா, மதுரை மாவட்டம், தெப்பக்குளம் சார் பதிவு அலுவலகம், மதுரை, தமிழ்நாடு, 625020. எல்லைகள் : வடக்கு : தனிக்கொடி சொத்து, தெற்கு : 20'0" அகலமான கிழக்கு மேற்காக சாலை, கிழக்கு : ராஜாமணியம்மாள் சொத்து, மேற்கு : வேலம்மாள் சொத்து.	436,063
2	பாண்டி சின்னக்கருப்பன், சுப்புலட்சுமி	பிளாட்.65, மனை எண்: 65, மறு சர்வே எண்.83/3, சர்வே எண்.76/1A, டி.கொக்குளம் கிராமம், திருமங்கலம் துணை பிரிவு, மதுரை மாவட்டம்., மதுரை, தமிழ்நாடு, 625007. எல்லைகள் : வடக்கு: மனை எண். 64 நிலம், தெற்கு: மனை எண். 66 நிலம், கிழக்கு:15 அடி சாலை, மேற்கு: காலி மனை.	870,797
3	ரோஸ்மேரி எல், ஜானகிராமன் வி	வீடு. 967/1A, 1/69E, கதவு எண்.1/69E, மறு சர்வே எண்: 967/1A, பழைய சர்வே எண்: 8455, மதுசூதனபுரம் தெற்கு கிராமம், கேசவன்புதன்துறை கிராம பஞ்சாயத்து, அகஸ்தீஸ்வரம் தாலுக்கா, கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரி, தமிழ்நாடு, 629501. எல்லைகள் : வடக்கு : காலி நிலம், தெற்கு : காலி நிலம், கிழக்கு : சாலை, மேற்கு : ரெக்ஸ் பாத்திமாவின் சொத்து.	2,058,021
4	எஸ் ராமலட்சுமி, சக்திவேல் ராமர்	வீடு : கதவு எண்: 3/117டி, கதவு எண்: 3–117டி, எஸ்.என்.120/3, மனை எண்:27, ஸ்ரீ பாலாஜி நகர், கோரம்பள்ளம் கிராமம், அய்யனடைப்பு, தூத்துக்குடி தாலுகா, தூத்துக்குடி, 628 101, எல்லைகள் : வடக்கு : மனை எண்.26, தெற்கு : மனை எண்.28, கிழக்கு : மனை எண்.52, மேற்கு : 20 அடி சாலை.	1,757,468

ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்டிற்கு செலுத்த வேண்டிய மேற்கூறிய தொகை மற்றும் வட்டியை இந்த அறிவிப்பை வெளியிட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்த நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். அவ்வாறு செலுத்த தவறும்பட்சத்தில் கடன்தாரர்கள், அடமானதாரர்கள் மற்றும் உத்தரவாததாரர்களின் ஈடுபெற்ற சொத்துக்களை சுவாதீனம் எடுத்தல் உள்பட ஏதாவது அல்லது அனைத்து ஈடுபெற்ற சொத்துகளுக்கு எதிராக சட்டத்தின் கீழ் தேவையான நடவடிக்கையை ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட் மேற்கொள்ளும். (1) குத்தகை மூலம் மாற்றுவதற்கான உரிமைகள், ஈடுபெற்ற சொத்துக்களை விடுவிக்க விற்பனை ஒதுக்கீடு உள்பட கடன்தாரர்கள்/உத்தரவாதாரர்களின் ஈடுபெற்ற சொத்துக்களை சுவாதீனம் எடுத்துக் கொள்ளும் உரிமை (2) குத்தகை, ஒதுக்கீடு அல்லது விற்பனை மற்றும் ஈடுபெற்ற சொத்துக்களை விடுவித்தல் மற்றும் உங்களால் மாற்றப்பட்ட ஈடுபெற்ற சொத்துக்கள் தொடர்பான அனைத்து உரிமைகள் கொண்டு ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்டினால் ஈடுபெற்ற சொத்துக்களை மாற்றுதல் உள்பட ஈடுபெற்ற சொத்துக்களின் நிர்வாகத்தை எடுத்துக் கொள்ளுதல் போன்றவற்றை உள்ளடக்கி நடவடிக்கை மேற்கொள்ள மேற்சொன்ன சட்டத்தின் கீழ் ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்டிற்கு உரிமை உள்ளது.

மேற்சொன்ன சட்டப்பிரிவு 13(13)ன்படி, ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்டின் முன் அனுமதியின்றி ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்டில் அடமானம் வைக்கப்பட்டுள்ள மேற்குறிப்பிட்டுள்ள எந்த ஒரு ஈடுபெற்ற ஆஸ்திகளை விற்பனை செய்தல், குத்தகைக்கு விடுதல் அல்லது இதர வகையில் வர்த்தகம் மேற்கொள்வதன் மூலம் (உங்கள் வணிகத்தின் சாதாரண போக்கைத் தவிர) மாற்றல் போன்றவற்றை மேற்கொள்ள உங்களுக்கு இதன் மூலம் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இடம் : மதுரை **கையொப்பம்: அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**
தேதி : 10/10/2024 **ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்**